Padasalai

# மின்னோட்டவியல்

## இயற்பியல் – 1 அலகு 2




| | | | |
|---|---|---|---|
| பெயர் : | | | |
| வகுப்பு : | 12 | பிரிவு : | |
| பள்ளி : | | | |
| தேர்வு எண் : | | | |



victory **R. SARAVANAN. M.Sc, M.Phil, B.Ed.,**
PG ASST (PHYSICS)
GBHSS, PARANGIPETTAI - 608 502

## பகுதி – I 2 மதிப்பெண் வினா – விடைகள்

**1. மின்னோட்டவியல் என்றால் என்ன ?**

- இயங்கும் மின்துகள்களின் பண்புகளை விளக்கும் இயற்பியலின் பிரிவு மின்னோட்டவியல் எனப்படும்.

**2. மின்னோட்டம் வரையறு.**

- கடத்தி ஒன்றில் கொடுக்கப்பட்ட குறுக்கு பரப்பு வழியாக மின்துகள்கள் பாயும் வீதம் மின்னோட்டம் ($I$) எனப்படும்.

$$I = \frac{Q}{t} \quad (or) \quad i = \frac{dQ}{dt}$$

- மின்னோட்டத்தின் S.I அலகு ***ஆம்பியர் (A).***

**3. ஒரு ஆம்பியர் (1 $A$) வரையறு**

- ஒரு கூலூம் மின்னூட்டம் கொண்ட மின்துகள்கள், ஒரு வினாடி நேரத்தில் செங்குத்தான குறுக்குவெட்டுப் பரப்பைக் கடந்தால் ஏற்படும் மின்னோட்டம் ஒரு ஆம்பியர் என வரையறுக்கப்படுகிறது. $[1\,A = 1\,C\,s^{-1}]$

**4. மரபு மின்னோட்டம் என்றால் என்ன ?**

- மரபுபடி மின்சுற்றில் மின்னோட்டம் நேர்மின் வாயிலிருந்து எதிர்மின்வாயுக்கு பாயும். இந்த மின்னோட்டமே மரபு மின்னோட்டம் அல்லது மின்னோட்டம் எனப்படும்.
- மரபு மின்னோட்டத்தின் திசையானது சோதனை நேர்மின்துகளின் திசையாகும் அல்லது எலக்ட்ரான்கள் செல்லும் திசைக்கு எதிர்திசையில் இருக்கும்.

**5. கட்டுறா எலக்ட்ரான் மற்றும் நேர்மின் அயனி என்றால் என்ன ?**

- எல்லா பொருள்களும் சமமான எண்ணிக்கையில் எலக்ட்ரான்கள் மற்றும் புரோட்டான்களை கொண்டிருப்பதால், நடுநிலைதன்மையில் இருக்கும்.
- வெளிக்கட்டில் உள்ள எலக்ட்ரான்கள் அணுவை விட்டு வெளியேறினால், அது கட்டுறா எலக்ட்ரானாக மாறி மின்னோட்டத்தை ஏற்படுத்தும்.
- எலக்ட்ரானை இழந்த அணு நேர்மின்னூட்டத்தை கொண்டிருப்பதால், அது நேர்மின்அயனி எனப்படும். இந்த நேர்மின் அயனிகள் கட்டுறா எலக்ட்ரான்களைப் போல் சுதந்திரமாக இயங்க இயலாது.

**6. இழுப்பு திசைவேகம் வரையறு.**

- கடத்தியில் உள்ள எலக்ட்ரான்களை மின்புலத்திற்கு உட்படுத்தும் போது, அவை பெறும் சராசரி திசைவேகம் இழுப்பு திசைவேகம் $\vec{v}_d$ எனப்படும்.

**7. இயக்க எண் வரையறு.**

- ஓரலகு மின்புலத்தினால் எலக்ட்ரான்கள் பெறும் இழுப்பு திசைவேகத்தின் எண்மதிப்பு இயக்க எண் எனப்படும் (μ). இதன் அலகு $m^2\,V^{-1}s^{-1}$

**8. மின்னோட்ட அடர்த்தி வரையறு.**

- கடத்தியின் ஓரலகு குறுக்கு வெட்டுப் பரப்பு வழியாக பாயும் மின்னோட்டத்தின அளவு மின்னோட்ட அடர்த்தி ($J$) எனப்படும்.

$$J = \frac{I}{A}$$

- மின்னோட்ட அடர்த்தியின் S.I அலகு $A\,m^{-2}$

**9. இழுப்பு திசைவேகம் மற்றும் இயக்க எண் வேறுபடுத்துக.**

| இழுப்பு திசைவேகம் | இயக்க எண் |
|---|---|
| 1) புற மின்புலத்தால் கட்டுறா எலக்ட்ரான்கள் பெறும் சராசரி திசைவேகம் | 1) ஓரலகு மின்புலத்தால் கட்டுறா எலக்ட்ரான்கள் பெறும் இழுப்பு திசைவேகம் |
| 2) இதன் அலகு $m\,s^{-1}$ | 2) இதன் அலகு $m^2\,V^{-1}s^{-1}$ |

**10. ஓம் விதியின் நுண்வடிவத்தைக் கூறுக.**

- மின்னோட்ட அடர்த்தியானது,

$$\vec{J} = n\,e\,\vec{v}_d = n\,e\left[\frac{e\,\tau}{m}\,\vec{E}\right] = \frac{n\,e^2\,\tau}{m}\,\vec{E}$$

$$(or) \quad \vec{J} = \sigma\,\vec{E}$$

- அதாவது மின்னோட்ட அடர்த்தியானது, செயல்படும் மின்புலத்திற்கு நேர்த்தகவில் இருக்கும். இதுவே ஓம்விதியின் நுண்வடிவம் ஆகும்.

**11. மின்னோட்ட அடர்த்தி ஒரு வெக்டர் அளவு. ஆனால் மின்னோட்டம் ஒரு ஸ்கேலார் அளவு. ஏன் ?**

- மின்னோட்டம் ($I$) என்பது மின்னோட்ட அடர்த்தி ($\vec{J}$) மற்றும் மின்துகள் பாயும் பரப்பு வெக்டர் ($\vec{A}$) ஆகியவற்றின் புள்ளிப் பெருக்கத்திற்கு சமமாகும். அதாவது, $I = \vec{J}\,.\,\vec{A} = J\,A\cos\theta$
- பரப்பு வெக்டரின் திசையைப் பொருத்து, மின்னோட்டமானது நேர்குறி அல்லது எதிர்க்குறியை பெறும். எனவே மின்னோட்டம் ஸ்கேலார் ஆகும்.


**12. ஓம் விதியின் பயன்பாட்டு வடிவத்தைக் கூறு.**

- V என்பது மின்னழுத்த வேறுபாடு, I என்பது மின்னோட்டம் மற்றும் R என்பது மின்தடை எனில், ஓம் விதியின் பயன்பாட்டு வடிவம்,

$$V = I\,R$$

**13. ஓம் விதிக்கு உட்படும் பொருட்கள் மற்றும் ஓமவிதிக்கு உட்படாத பொருட்கள் என்பவை யாவை ?**

- ஒரு பொருளின் மீது செல்லும் மின்னோட்டம் மற்றும் மின்னழுத்த வேறுபாடு ஆகிய இரண்டிற்குமான வரைபடம் நேர்கோடாக அமைந்தால், அப்பொருட்கள் ஓம் விதிக்கு உட்படும் பொருட்கள் ஆகும்.
- மின்னோட்டம் மற்றும் மின்னழுத்த வேறுபாட்டிற்கா வரைபடம் நேர்கோடாக அமையாமல் சிக்கலான வடிவில் அமைந்தால், அப்பொருட்கள் ஓம் விதிக்கு உட்படாத பொருட்கள் ஆகும்.




**14. கடத்தியின் மின்தடை வரையறு.**

- கடத்தியின் முனைகளுக்கிடையே உள்ள மின்னழுத்த வேறுபாட்டிற்கும் ($V$), கடத்தியின் வழியே மின்னோட்டத்திற்கும் ($I$) உள்ள தகவு அக்கடத்தியின் மின்தடை ($R$) எனப்படும்.

$$R = \frac{V}{I}$$

- மின்தடையின் S.I அலகு ***ஓம் (Ω)***

**15. கடத்தியின் மின்தடை சார்ந்துள்ள காரணிகள் யாவை ?**

- கடத்தியின் மின்தடையானது,
  1) அதன் நீளத்திற்கு நேர்தகவில் இருக்கும்
  2) அதன் குறுக்கு வெட்டுப் பரப்புக்கு எதிர்தகவில் இருக்கும். அதாவது

$$R = \frac{l}{\sigma\,A} = \frac{\rho\,l}{A}$$

- இங்கு, $\sigma \rightarrow$ கடத்தியின் மின்கடத்து எண்
  $\rho \rightarrow$ கடத்தியின் மின்தடை எண்

**16. கடத்தியின் மின்தடை எண் வரையறு.**

- கடத்திபொருளின் மின்தடை எண் என்பது ஓரலகு நீளமும், ஓரலகு குறுக்குவெட்டு பரப்பும் கொண்ட கடத்தியானது மின்னோட்டத்திற்க அளிக்கும் மின்தடை ஆகும்

$$\rho = \frac{1}{\sigma} = \frac{R\,A}{l}$$

- இதன் S.I அலகு ***ஓம்–மீட்டர் (Ω m)***
- இது கடத்தியின் தன்மையை சார்ந்தது. அதன் அளவையோ, வடிவத்தையோ சார்ந்ததல்ல.

**17. கடத்தியின் மின்கடத்து எண் வரையறு.**

- ஒரு கடத்தியின் மின்தடை ஆனது,

$$R = \frac{l}{\sigma A}$$

- இங்கு, $\sigma$ என்பது கடத்தியின் மின்கடத்து எண் எனப்படும்.
- இது கடத்தியின் தன்மையை சார்ந்தது. அதன் அளவையோ, வடிவத்தையோ சார்ந்ததல்ல.

**18. மின் இணைப்புகளை ஈரமான கையால் தொடுவது ஆபத்தானது. ஏன் ?**

- ஓம் விதிப்படி, மின்தடை குறைவானால், மின்னோட்டம் அதிகமாகும் $\left[R = \frac{V}{I}\right]$
- மனித உடலில் நீர் அதிக அளவு உள்ளதால் மின்தடை சாதாரணமாக 200 Ω ஆகும்.
- உலர்ந்த தோலின் மின்தடை மிக அதிகமாக சுமார் 500 k Ω அளவு இருக்கும். ஆனால் தோலானது ஈரமானதாக இருந்தால் மின்தடை மதிப்பு குறைந்து சுமார் 1000 Ω அளவே இருக்கும்.
- ஈரமான தோலின் மின்தடை குறைவாக இருப்பதால் ஈரமான கையால் மின்இணைப்புகளை தொடுவது மிகவும் ஆபத்தானது ஆகும்

**19. மின்தடை வெப்பநிலை எண் வரையறு.**

- மின்தடை வெப்பநிலை எண் என்பது ஒரு டிகிரி வெப்பநிலை உயர்வில் ஏற்படும் மின்தடை எண் அதிகரிப்பிற்கும், $T_o$ வெப்பநிலையில் உள்ள மின்தடை எண்ணுக்கும் இடையே உள்ள விகிதம் ஆகும்.
- மின்தடை வெப்பநிலை எண் S.I அலகு /°C

**20. மீக்கடத்துத் திறன் என்றால் என்ன ?**

- சில பொருட்களின் வெப்பநிலையானது குறிப்பிட்ட வெப்பநிலைக்கு கீழே குறையும் போது அதன் மின்தடை எண் சுழியாகிறது. அவ்வெப்பநிலை *மாறுநிலை அல்லது பெயர்வு வெப்பநிலை* எனப்படும். இந்நிலையை வெளிப்படுத்தும் பொருட்கள் *மீக்கடத்திகள்* எனப்படும்.
- சுழி மின்தடையுடன் மின்னோட்டத்தைக் கடத்தும் இப் ண்பு மீக்கடத்துத்திறன் எனப்படும்.
- இதனை கண்டுபிடித்தவர் *காமர்லிங் ஒன்ஸ்*
- பாதரத்தின் பெயர்வு வெப்பநிலை $4.2\ K$

**21. மின்னாற்றல் மற்றும் மின்திறன் என்றால் என்ன ?**

| மின்னாற்றல் | மின்திறன் |
|---|---|
| 1) கடத்தியின் ஒரு முனையிலிருந்து மறு முனைக்கு மின்துகள்கள் நகர மின்கலத்தால் வேலை செய்யப்படவேண்டும்.இவ் வேலையே மின்னாற்றல் எனப்படும் $dW = dU = V\,dQ$ | 1) மின்னழுத்த ஆற்றல் அளிக்கப்படும் வீதம் மின்திறன் எனப்படும். $P = \frac{dU}{dt} = V\,I$ |
| 2) மின்னாற்றலின் S.I அலகு ***ஜூல் (J)*** | 2) மின்திறனின் S.I அலகு ***வாட் (W)*** |
| 3) இதன் நடைமுறை அலகு ***கிலோ வாட் மணி (kWh)*** $1\ kWh = 3.6\ X\ 10^6\ J$ | 3) )இதன் நடைமுறை அலகு ***குதிரை திறன் (H.P)*** $1\ H\ P\ = 746\ W$ |

**22. ஒரு மின்சுற்றில் திறனுக்கான சமன்பாடு $P = V\,I$ என்பதை வருவி.**

- மின்னாற்றலுக்கான சமன்பாடு, $dU = V\,dQ$
- மின்னழுத்த ஆற்றல் அளிக்கப்படும் வீதம் மின்திறன் எனப்படும். எனவே,

$$P = \frac{dU}{dt} = \frac{d\,(V\,dQ)}{dt} = V\,\frac{dQ}{dt}$$

- ஆனால் $\frac{dQ}{dt} = I \rightarrow$ மின்னோட்டம்

$\therefore \quad P = V\,I$

**23. மின்சுற்றில் திறனக்கான பல்வேறு வகையான சமன்பாடுகளை எழுதுக.**

- மின்திறனுக்கான சமன்பாடு,

$$P = V\,I$$

- ஓம் விதிப்படி, $V = I\,R$, என்பதால் மின்திறன்

$$P = V\,I = (I\,R)\,I = I^2\,R$$

- மாற்றாக, $I = V/\,R$, என்பதால் மின்திறன்

$$P = V\,I = V\left(\frac{V}{R}\right) = \frac{V^2}{R}$$

**24. மின்கலன் என்றால் என்ன ?**

- வேதி ஆற்றலை மின் ஆற்றலாக மாற்றி மின்னோட்டத்தை ஏற்படுத்தும் சாதனம் மின்கலன் எனப்படும்.
- இதில் இரு மின்தண்டுகள் (ஆனோடு மற்றும் கேதோடு) ஒரு மின்பகுளியில் மூழ்கிய நிலையில் வைக்கப்பட்டிருக்கும்.

**25. மின்னியக்கு விசை வரையறு.**

- மின்சுற்றில் ஓரவகு மின்னூட்டம் கொண்ட மின்துகள்களை நகர்த்த மின்கலத்தொகுப்பானது செய்யும் வேலையின் அளவே அம்மின்கலத்தின் மின்னியக்கு விசை ( $\xi$ ) எனப்படும்.
- இது மின்னோட்டம் பாயாத நிலையில் மின்கலத்தொகுப்பின் மின்முனைகளுக்கு இடையே உள்ள மின்னழுத்த வேறுபாட்டைக் குறிக்கிறது.
- இதன் அலகு ***வோல்ட் (V)***

**26. மின்கலத்தின் அகமின்தடை வரையறு.**

- ஒரு மின்கலன் அல்லது மின்கலத்தொகுப்பானது மின்தண்டுகள் மற்றும் மின்பகுளியால் ஆனது.
- எனவே மின்கலத்தினுள் மின்துகள்களின் ஓட்டத்திற்கு தடை இருக்கும். இம்மின்தடை மின்கலத்தின் அகமின்தடை (r) எனப்படும்.
- புதியதாக உருவாக்கப்பட்ட மின்கலத்தின் அகமின்தடை மிகக் குறைவாக (ஏறக்குறைய சுழி) இருக்கும்

**27. கிர்க்காஃப் முதல் விதியை (மின்னோட்ட விதி அல்லது சந்தி விதி) கூறுக.**

- இவ்விதிப்படி எந்த ஒரு சந்தியிலும் சந்திக்கின்ற மின்னோட்டங்களின் குறியியல் கூட்டுத்தொகை சுழியாகும் ($\sum I\ = 0$).
- இது மின்துகள்களில் உள்ள மின்னூட்டங்களின் அழிவின்மை விதியின் அடிப்படையில் அமைகிறது.

28. கிர்க்காஃப் இரண்டாம் விதியை (மின்னழுத்த வேறுபாட்டு விதி அல்லது சுற்று விதி) கூறுக.

- இவ்விதிப்படி எந்தவொரு மூடிய சுற்றின் ஒவ்வொரு பகுதியிலும் உள்ள மின்னோட்டம் மற்றும் மின்தடை ஆகியவற்றின் பெருக்கற்பலன்களின் குறியியல் கூட்டுத்தொகையானது, அந்த மின்சுற்றில உள்ள மின்னியக்கு விசைகளின் குறியியல் கூட்டுத்தொகைக்கு சமம் $[\sum I\,R = \sum \xi]$
- இது தனித்த அமைப்பின் ஆற்றல் மாறா விதிப்படி அமைகிறது.

**29. கிர்க்காஃப் முதல் விதியை பயன்படுத்துவதில் உள்ள குறியிடுதல் மரபு யாது ?**

- கிர்க்காஃப் முதல் விதியைப் பயன்படுத்தும் போது சந்தியை நோக்கிச் செல்லும் மின்னோட்டம் நேர்க்குறி எனவும், சந்தியை விட்டு வெளியேறும் மின்னோட்டம் எதிர்குறி எனவும் எடுத்துக்கொள்ளப்படும்.

**30. கிர்க்காஃப் இரண்டாம் விதியைப் பயன்படுத்துவதில் உள்ள குறியிடுதல் மரபு யாது ?**

- மூடிய சுற்றில் நாம் செல்லும் திசையில் மின்னோட்டம் சென்றால், மின்னோட்டம் மற்றும் அப்பாதையில் உள்ள மின்தடை ஆகியவற்றின் பெருக்கற்பலன் நேர்குறியாகவும், நாம் செல்லும் திசைக்கு எதிர்திசையில் மின்னோட்டம் சென்றால், அந்த பெருக்கற்பலன் எதிர்குறியாகவும் எடுத்துக் கொள்ளப்படுகிறது.
- இதேபோல் மின்கலனின் எதிர்மின்முனையிலிருந்து நேர்முனை வழியாக நாம் சென்றால் மின்னியக்கு விசை நேர்குறியாகவும், மாறாக நேர்முனையிலிருந்து எதிர்முனை வழியாக சென்றால் மின்னியக்கு விசை எதிர்குறியாகவும் எடுத்துக் கொள்ளப்படுகிறது.

**31. கால்வனாமீட்டர் என்றால் என்ன ?**

- கால்வனாமீட்டர் என்பது மின்னோட்டத்தை கண்டறியவும், அளவிடவும் உதவும் ஒரு சாதனம் ஆகும்.
- ஒரு மின்சுற்றின் வெவ்வேறு பகுதிகளில் உள்ள மின்னழுத்த வேறுபாட்டை ஒப்பிடவும் இது பெருமளவு பயன்படுத்தப்படுகிறது.

**32. மின்னழுத்தமானியின் தத்துவத்தைக் கூறுக.**

- $I -$ என்பது மின்னோட்டம், $r -$ என்பது மின்னழுத்தமானி கம்பியின் ஓரலகு நீளத்தின் மின்தடை மற்றும் $l -$ என்பது சமன்செய்யும் நீளம் எனில், மின்னியக்க விசையானது, $\xi = I\,r\,l$
- இங்கு மற்றும் மாறிலிகள் என்பதால், $\xi \propto l$
- அதாவது மின்கலத்தின் *மின்னியக்க விசையானது, சமன்செய்யும் நீளத்திற்க நேர்தகவில் அமையும்.* இதுவே மின்னழுத்தமானியின் தத்துவம் ஆகும்.

**33. ஜூலில் வெப்ப விளைவு என்றால் என்ன ?**

- ஒரு மின்தடையாக்கியின் வழியாக மின்னோட்டம் பாயும் போது, மின்தடையாக்கிக்கு அளிக்கப்படும் மின்னாற்றலில் சிறிதளவு வெப்ப ஆற்றலாக மாற்றப்பட்டு வீணாகிறது. மின்னோட்டத்தின் இந்த வெப்ப விளைவே ஜூலில் வெப்ப விளைவு எனப்படும்.

**34. ஜூலின் வெப்ப விதியைக் கூறுக.**

- ஜூலில் வெப்ப விளைவால் வெளிப்படும் வெப்பம்,

$$H = V\,I\,t = \frac{V^2}{R}\,t = I^2\,R\,t$$

- எனவே ஜூலில் வெப்ப விதிப்படி, ஒரு மின்சுற்றில் மின்னோட்டம் பாய்வதால் ஏற்படும் வெப்பமானது,
  1) மின்னோட்டத்தின் இருமடிக்கு நேர்தகவிலும்
  2) மின்சுற்றின் மின்தடைக்கு நேர்தகவிலும்
  3) மின்னோட்டம் பாயும் நேரத்திற்கு நேர்தகவிலும் அமையும்.

**35. சூடேற்றும் கம்பியாக பயன்படும் தனிமத்தின் பண்புகள் யாவை ?**

- மின்சூடேற்றிகளில் சூடேற்றும் கம்பியாக நிக்ரோம் உலோக கலவை பயன்படுத்தப்படுகிறது. இதன் பண்புகள்
  1) நிக்ரோமின் மின்தடை எண் மிக அதிகம்
  2) இதன் உருகுநிலை மிக அதிகம்
  3) இதனை ஆக்ஸிஜனேற்றம் அடையாமலேயே அதிக வெப்பநிலைக்கு வெப்பப்படுத்த முடியும்.

**36. மின் உருக்கிக் கம்பிகள் பற்றி குறிப்பு வரைக.**

- அதிக அளவு மின்னோட்டம் மின்சாதனங்கள் வழியே பாயும் போது தோன்றும் வெப்பத்தினால் அவை பாதிக்கபடாமல் இருக்க அதனுடன் தொடரிணைப்பில் இணைக்கப்படும் அமைப்பு மின்உருக்கி கம்பி எனப்படும்.
- இவை மிகக்குறைந்த நீளமுடைய குறைவான உருகுநிலை கொண்ட பொருளாலானவை.

**37. மின்சுற்று துண்டிப்பான்கள் பற்றி குறிப்பு வரைக.**

- மின்னோட்டம் அதிகரிக்கும் போது அது உருகி எரிந்து விடுவதால் அதனை மாற்ற வேண்டிய அவசியம் ஏற்படுகிறது.
- எனவே தற்போது மின் உருக்கிகளுக்கு பதிலாக மின்சுற்று துண்டிப்பான்கள் பயன்படுகிறது. தவறான மின் இணைப்புகள் அல்லது அதிகமான மின்னோட்டம் மின்சுற்றில் பாயும் போது மின்துண்டிப்பான்களின் சாவி மின் சுற்றை திறந்துவிடும்.
- பின்னர் மின்சுற்றின் பழுதை நீக்கயடைன் நாம் மின துண்டிப்பானின் சாவியை மூடி விடலாம்.

**38. மின் விளக்குகள் பற்றி குறிப்பு வரைக.**

- மின் விளக்குகளில் டங்க்ஸ்டன் இழைகள் கண்ணாடி குடுவைகளில் வைக்கப்பட்டு மின்னோட்டம் மூலம் மீ உயர் வெப்பநிலைக்கு சூடேற்றப்படுகின்றன.
- டங்க்ஸ்டனின் உருகு நிலை 3380 °C
- மின் விளக்குகளில் 5 % மட்டுமே மின் ஆற்றல் ஒளியாக மாற்றப்படுகிறது. மீதமுள்ள ஆற்றல் வெப்பமாக வீணாகிறது.

**39. சீபெக் விளைவு வரையறு.**

- ஒரு மூடிய சுற்றில் இரு வெவ்வேறு உலோகங்களின் இரு சந்திப்புகளை வெவ்வேறு வெப்பநிலைகளில் வைக்கும் போது மின்னழுத்த வேறுபாடு (மின்னியக்க விசை) தோன்றும் நிகழ்வு வெப்ப மின் விளைவு அல்லது சீபெக் விளைவு எனப்படும்.
- இம்மின்னியக்கு விசையினால் ஏற்படும் மின்னோட்டம் வெப்பமின்னோட்டம் எனப்படும்.
- இரு உலோகங்கள் இணைத்து சந்திப்புகளை ஏற்படுத்துவது வெப்ப மின்னிரட்டை எனப்படும்.

**40. சீபெக் விளைவின் பயன்பாடுகள் யாவை ?**

- மின் உற்பத்தி நிலையங்களில் வீணாகும் வெப்ப ஆற்றலை மின்னாற்றலாக மாற்றும் வெப்ப மின்னியற்றிகளில் (சீபெக் மின்னியற்றி) சீபெக் விளைவு பயன்படுத்தப்படுகிறது.
- தானியங்கி வாகனங்களில் எரிபொருள் பயனுறு திறனை அதிகரிக்க பயன்படும் தானியங்கி வெப்ப மின்னியற்றிகளில் பயன்படுத்தப்படுகிறது.
- வெப்ப மின்னிரட்டை மற்றும் வெப்ப மின்னிரட்டை அடுக்களில் பயன்படுத்தப்படும் பொருட்களுக்கிடையே உள்ள வெப்பநிலை வேறுபாட்டை அளவிட சீபெக் விளைவு பயன்படுகிறது.

**41. பெல்டியர் விளைவு வரையறு.**

- வெப்ப மின்னிரட்டையுடன் கூடிய மின் சுற்றில் மின்னோட்டத்தை செலுத்தும் போது, ஒரு சந்தியில் வெப்பம் வெளிப்படுதலும் மற்றொரு சந்தியில் வெப்பம் உட்கவர்தலும் நடைபெறும். இவ்விளைவு பெல்டியர் விளைவு எனப்படும்.

**42. தாம்சன் விளைவு வரையறு.**

- ஒரு கடத்தியின் இரு புள்ளிகள் வெவ்வேறு வெப்பநிலைகளில் உள்ளபோது, இந்த புள்ளிகளில் எலக்ட்ரான் அடர்த்தி வேறுபடுவதால் இவ்விரு புள்ளிகளுக்கிடையே மின்னழுத்த வேறுபாடு உருவாக்கப்படும். இதனால் வெப்பம் வெளிப்படுதலும் உட்கவரப்படுதலும் கடத்தி முழுவதும் நடைபெறும் . இதுவே தாம்சன் விளைவு எனப்படும்.

## பகுதி – II 3 மதிப்பெண் வினா – விடைகள்

**1. இழுப்பு திசைவேகத்திற்கான கோவையை தருவி. அது எவ்வாறு இயக்க எண்ணுடன் தொடர்பில் உள்ளது ?**

**இழுப்பு திசைவேகம் :**

- புற மின்புலம் செயல்படாத நிலையில் கடத்தியில் உள்ள கட்டுறா எலக்ட்ரான்களின் நிகர இயக்கம் சுழி என்பதால் நிகர மின்னோட்டமும் இருக்காது.
- $\vec{E}$ என்ற மின்புலம் செயல்படுத்தப்படும் போது, எலக்ட்ரான்கள் மீது செயல்படும் விசை,

$$\vec{F} = -e\,\vec{E} \qquad ------(1)$$

- இதனால் எலக்கட்ரான்கள் புலத்திற்கு எதிர்திசையில் முடுக்கம் அடையும். நியூட்டன் இரண்டாம் விதிப்படி,

$$\vec{a} = \frac{\vec{F}}{m} = \frac{-e\,\vec{E}}{m} \qquad ------(2)$$

- ஆனால் கடத்தியில் உள்ள நேர்மின் அயனிகள் முடுக்கம் பெற்ற எலக்ட்ரான்களை சிதறடித்து அதன் இயக்க திசையை மாற்றும்.
- இந்த மோதலின் விளைவால் ஏற்படும் குறுக்க நெடுக்கு இயக்கத்துடன் கூடுதலாக எலக்ட்ரானகள் கடத்தி வழியே $\vec{E}$ –ன் திசைக்கு எதிர்திசையில் ஒரு குறிப்பிட்ட திசைவேகத்தில் மெதுவாக செல்லும்.
- *புற மின்புலத்தில் கட்டுறா எலக்ட்ரான்கள் பெறும் சராசரி திசைவேகம் இழுப்பு திசைவேகம் $\vec{v}_d$ எனப்படும்.*
- இரு அடுத்தடுத்த மோதல்களுக்கிடைப்பட்ட சராசரி நேரம் என்பது சராசரி தளர்வு நேரம் $\tau$ எனப்படும்.
- எனவே இழுப்பு திசைவேகம்,

$$\vec{v}_d = \vec{a}\,\tau = \frac{-e\,\vec{E}}{m}\,\tau = -\mu\,\vec{E}$$


- இங்கு, $\frac{e\,\tau}{m} = \mu \rightarrow$ எலக்ட்ரான்களின் இயக்க எண்
- *ஓரலகு மின்புலத்தில் எலக்ட்ரான் பெறும் இழுப்பு திசைவேகம் இயக்க எண் எனப்படும்.* இதன் எண்மதிப்பு

$$\mu = \frac{|\vec{v}_d|}{\vec{E}}$$

- இயக்க எண்ணின் S.I அலகு $m^2V^{-1}s^{-1}$

**2. மின்னோட்டம் மற்றும் இழுப்பு திசைவேகத்திற்கான தொடர்பை தருவி.**

**மின்னோட்டம் மற்றும் இழுப்பு திசைவேகம் – தொடர்பு :**




- கடத்தியின் குறுக்கு வெட்டு பரப்பு $= A$
  கடத்தியின் ஓரலகு பருமனில் உள்ள எலக்ட்ரான்களின் எண்ணிக்கை $= n$
  வலமிருந்து இடமாக செயல்படும் மின்புலம் $= \vec{E}$
  எலக்ட்ரான்களின் இழுப்பு திசைவேகம் $= v_d$
  எலக்ட்ரானின் மின்னூட்ட மதிப்பு $= e$
- $dt$ – நேர இடைவெளியில், எலக்ட்ரான்கள் நகர்ந்த தொலைவு $dx$ – எனில்,

$$v_d = \frac{dx}{dt} \qquad (or) \qquad dx = v_d\,dt$$

- $dt$ –நேரத்தில் உள்ள எலக்ட்ரான்களின் எண்ணிக்கை

$$= \text{பருமக்கூறு} \; X\, n$$
$$= A\ dx\ X\ n$$
$$= A\ v_d\ dt\ X\ n$$

- எனவே இப்பரும கூறில் உள்ள மின்துகள்களின் மொத்த மின்னூட்டம்,

$$dQ = A\,v_d\,dt\ n\,e$$

- வரையறைபடி, மின்னோட்டம்

$$I = \frac{dQ}{dt} = \frac{A\,v_d\,dt\ n\,e}{dt}$$
$$I = n\,e\,A\,v_d$$

**3. கார்பன் மின்தடையாக்கிகள் பற்றி குறிப்பு வரைக.**

**கார்பன் மின்தடையாக்கிகள் :**

- கார்பன் மின்தடையாக்கிகளில் பீங்கான் உள்ளகத்தின் மீது மெல்லிய கார்பன் படிகம் வார்க்கப்பட்டிருக்கும்.
- இது அளவில் சிறியது, விலை மலிவானது மற்றும் நீண்ட நாள் உழைக்கக்கூடியது.
- மின்தடையாக்கிகளின் மதிப்பைக் காண அதன் மீது வரையப்பட்ட நிற வளையங்கள் பயன்படுகின்றன.




- இதில் இடதுபுறம் மூன்று நிற வளையங்களும், வலது புறம் ஒரு உலோக நிற வளையமும் இருக்கும்.
- முதல் இரண்டு நிற வளையங்கள் மின்தடையின் முக்கிய எண்ணுருக்களையும், மூன்றாவது நிற வளையம் பத்தின் அடுக்கு பெருக்கலையும் குறிக்கிறது. நான்காவது உலோக வளையம் மின்தடை மாறுபடும் அளவை குறிக்கும்.

| நிறம் | எண் | பெருக்க அளவு |
|---|---|---|
| கருப்பு | 0 | 1 |
| பழுப்பு | 1 | $10^1$ |
| சிவப்பு | 2 | $10^2$ |
| ஆரஞ்சு | 3 | $10^3$ |
| மஞ்சள் | 4 | $10^4$ |
| பச்சை | 5 | $10^5$ |
| நீலம் | 6 | $10^6$ |
| ஊதா | 7 | $10^7$ |
| சாம்பல் | 8 | $10^8$ |
| வெள்ளை | 9 | $10^9$ |

| நிறம் | மாறுபடும் அளவு |
|---|---|
| தங்கம் | 5 % |
| வெள்ளி | 10 % |
| வளையம் இல்லை (நிறமற்றது) | 20 % |

**எடுத்துக்காட்டு :**

- படத்தில் காட்டப்பட்டுள்ள மின்தடையாக்கிக்கு
  முதல் வளையம் (பச்சை) – 5
  இரண்டாவது வளையம் (நீலம்) – 6
  மூன்றாவது வளையம் (ஆரஞ்சு) $-10^3$
  நான்காவது வளையம் (தங்கம்) – 5 %
- மின்தடையாக்கியின் மதிப்பு $= \mathbf{56\ X\ 10^3\ \Omega = 56\ k\,\Omega}$
  மாறுபடும் அளவு $= 5\ \%$

**4. வெப்பநிலை மின்தடை எண் வரையறு. அதற்கான சமன்பாட்டை தருவி.**

**வெப்பநிலை மின்தடை எண் :**

- பொருள்களின் மின்தடையானது வெப்பநிலையை சார்ந்து அமையும்.
- $T_o$°C – வெப்பநிலையில் மின்தடை எண் $= \rho_o$
  $T$°C – வெப்பநிலையில் மின்தடை எண் $= \rho_T$
- எனவே,

$$\rho_T = \rho_o\,[1 + \alpha\,(T - T_o)] \qquad ----(1)$$

- இங்கு $\alpha \rightarrow$ வெப்பநிலை மின்தடை எண்

- சமன்பாடு (1) –லிருந்து

$$\rho_T = \rho_o + \rho_o\,\alpha\,(T - T_o)$$
$$\rho_T - \rho_o = \rho_o\,\alpha\,(T - T_o)$$
$$\therefore \quad \boldsymbol{\alpha} = \frac{\boldsymbol{\rho_T - \rho_o}}{\boldsymbol{\rho_o\,(T - T_o)}} = \frac{\boldsymbol{\Delta\rho}}{\boldsymbol{\rho_o\,\Delta T}}$$


- இங்கு, $\Delta\rho = \rho_T - \rho_o$ → மின்தடைஎண் மாறுபாடு
  $\Delta T = T - T_o$ → வெப்பநிலை மாறுபாடு
- எனவே வெப்பநிலை மின்தடை எண் என்பது ஒரு டிகிரி வெப்பநிலை உயர்வில் ஏற்படும் மின்தடை எண் அதிகரிப்பிற்கும், $T_o$ வெப்பநிலையில் உள்ள மின்தடை எண்ணுக்கும் இடையே உள்ள விகிதம் ஆகும். இதன் அலகு /°C ஆகும்.
- *கடத்திகளுக்கு* $\alpha$ *மதிப்பு நேர்குறியுடையது.* அதாவது கடத்திகளின் வெப்பநிலை அதிகரிக்கும் போது, கட்டுறா எலக்ட்ரான்களின் இயக்க ஆற்றல் அதிகரிப்பதால் மோதல்களின் எண்ணிக்கை அதிகரித்து, மின்தடை எண்ணும் அதிகரிக்கும்.
- $T$ °C வெப்பநிலையில் கடத்தியின் மின்தடை,

$$\boldsymbol{R_T = R_o\,[1 + \alpha\,(T - T_o)]}$$

- *குறைகடத்திகளுக்கு* $\alpha$ *மதிப்பு எதிர்குறியுடையது.* அதாவது வெப்பநிலை அதிகரிக்கும் போது குறைகடத்தியின் அணுக்களில் இருந்து அதிக எண்ணிக்கையில் எலக்ட்ரான்கள் விடுபடுவதால் மின்னோட்டம் அதிகரிக்கும். இதனால் மின்தடை எண் குறையும்.
- *எதிர்குறி வெப்பநிலை மின்தடை எண் உடைய குறைகடத்தியானது* ***வெப்ப தடையகம் (தெர்மிஸ்டர்)*** எனப்படும்.

**5. தொடரிணைப்பில் மின்கலன்கள் பற்றி சிறு குறிப்பு தருக.**

**<u>தொடரிணைப்பில் மினகலன்கள்</u> :**




- $r$ – அகமின்தடையும், $\xi$ – மின்னியக்க விசையும் கொண்ட $n$ – மின்கலன்கள் படத்தில் உள்ளவாறு $R$ –என்ற புறமின்தடையாக்கியுடன் தொடரிணைப்பில் உள்ளன என்க.
- தொகுப்பின் மொத்த மின்னியக்கு விசை $= n\,\xi$
  சுற்றின் மொத்த மின்தடை $= n\,r + R$
- ஓம் விதிப்படி, இச்சுற்றில் பாயும் மின்னோட்டம்,

$$\text{மின்னோட்டம் (I)} = \frac{\text{மொத்த மின்னியக்கு விசை}}{\text{மொத்த மின்தடை}}$$

$$I = \frac{n\,\xi}{n\,r + R} \qquad ----(1)$$

- $r \ll R$ எனில், சமன்பாடு (1) – ஆனது

$$I = \frac{n\,\xi}{R} \approx n\,I_1 \qquad \left[\because \frac{\xi}{R} = I_1\right]$$

அதாவது $r$ – மதிப்பு புறக்கணிக்க தக்க அளவு இருந்தால், மின்கலத் தொகுப்பு ஏற்படுத்தும் மின்னோட்டம் ($I$) ஆனது ஒரு மின்கலம் ஏற்படுத்தும் மினோட்டத்தைப் ($I_1$) போன்று $n$ – மடங்கு அமையும். இது பயனுள்ளது.


- $r \gg R$ எனில், சமன்பாடு (1) – ஆனது

$$I = \frac{n\,\xi}{n\,r} = \frac{\xi}{r} \approx I_1$$

அதாவது, $r$ – மதிப்பு அதிகமானதாக இருந்தால், மின்கலத் தொகுப்பு ஏற்படுத்தும் மின்னோட்டம் (I) ஆனது ஒரு மின்கலம் ஏற்படுத்தும் மின்னோட்டத்திற்கு ($I_1$) சமமாகும். இது பயனற்றது

**6. பக்க இணைப்பில் மின்கலன்கள் பற்றி சிறு குறிப்பு தருக.**

**<u>பக்க இணைப்பில் மினகலன்கள்</u> :**




- $r$ – அகமின்தடையும், $\xi$ – மின்னியக்க விசையும் கொண்ட $n$ – மின்கலன்கள் படத்தில் உள்ளவாறு $R$ –என்ற புறமின்தடையாக்கியுடன் பக்க இணைப்பில் உள்ளன என்க.
- தொகுப்பின் மொத்த மின்னியக்கு விசை $= \xi$
  சுற்றின் மொத்த மின்தடை $= \frac{r}{n} + R$
- ஓம் விதிப்படி, இச்சுற்றில் பாயும் மின்னோட்டம்,

$$\text{மின்னோட்டம் (I)} = \frac{\text{மொத்த மின்னியக்கு விசை}}{\text{மொத்த மின்தடை}}$$

$$I = \frac{\xi}{\frac{r}{n} + R} = \frac{n\,\xi}{n\,r + R} \qquad ----(1)$$

- $r \ll R$ எனில், சமன்பாடு (1) – ஆனது

$$I = \frac{n\,\xi}{R} \approx n\,I_1 \qquad \left[\because \frac{\xi}{R} = I_1\right]$$

அதாவது $r$ – மதிப்பு புறக்கணிக்க தக்க அளவு இருந்தால், மின்கலத் தொகுப்பு ஏற்படுத்தும் மின்னோட்டம் ($I$) ஆனது ஒரு மின்கலம் ஏற்படுத்தும் மினோட்டத்தைப் ($I_1$) போன்று $n$ – மடங்கு அமையும். இது பயனுள்ளது.


- $r \gg R$ எனில், சமன்பாடு (1) – ஆனது

$$I = \frac{n\,\xi}{n\,r} = \frac{\xi}{r} \approx I_1$$

அதாவது, $r$ – மதிப்பு அதிகமானதாக இருந்தால், மின்கலத் தொகுப்பு ஏற்படுத்தும் மின்னோட்டம் (I) ஆனது ஒரு மின்கலம் ஏற்படுத்தும் மின்னோட்டத்திற்கு ($I_1$) சமமாகும். இது பயனற்றது

**7. மின்னழுத்தமானியின் தத்துவத்தை விளக்குக.**

**<u>மின்னழுத்தமானி – தத்துவம்</u> :**





- மின்கலத்தொகுப்பு ( $Bt$ ), சாவி ( $K$ ) மற்றும் மின்னழுத்தமானி கம்பி (CD) ஆகியவை தொடர் இணைப்பில் இணைக்கப்பட்டு முதன்மை சுற்றாக அமைகிறது.
- $\xi$ – மின்னியக்குவிசை கொண்ட மின்கலத்தின் நேர்முனை புள்ளி $C$ – உடனும், எதிர் முனை கால்வனாமீட்டர் (G) மற்றும் உயர்மின்தடை (HR) வழியாக தொடுசாவி (J) உடனும் இணைக்கப்பட்டு உள்ளது. இது துணைசுற்றாக அமைகிறது.
- தொடுசாவி உதவியுடன் மின்னழுத்தமானி கம்பியில் J என்ற புள்ளியில் இணைப்பு ஏற்படுத்தப்படுகிறது.
- CJ –பகுதியின் குறுக்கே உள்ள மின்னழுத்த வேறுபாடு, மின்கலத்தின் மின்னியக்கு விசை $\xi$ –க்கு சமமானால் கால்வனாமீட்டர் சுழிவிலக்கத்தைக் காட்டும்.
- எனவே CJ என்பது சமன்செய்யும் நீளம் ($l$) எனப்படும்.
- ஓரலகு நீளக் கம்பியின் மின்தடை $r$ –எனில், ஓம் விதிப்படி, குறுக்கே மின்னழுத்த வேறுபாடு $= I\,r\,l$
- ஏனவே சுழிவிலக்க நிலையில்,

$$\boldsymbol{\xi = I\,r\,l}$$

- இங்கு $\boldsymbol{I}$ மற்றும் $\boldsymbol{r}$ மாறிலிகள் என்பதால், $\boldsymbol{\xi \propto l}$

**8. சீபெக் விளைவை விளக்குக. அதன் பயன்பாடுகளை தருக.**

**சீபெக் விளைவு :**




- ஒரு மூடிய சுற்றில் இரு வெவ்வேறு உலோகங்களின் இரு சந்திப்புகளை வெவ்வேறு வெப்பநிலைகளில் வைக்கும் போது மின்னழுத்த வேறுபாடு (மின்னியக்கு விசை) தோன்றும் என்பதை சீபெக் கண்டறிந்தார்.
- இது வெப்ப மின் விளைவு அல்லது சீபெக் விளைவு எனப்படும்.
- இம்மின்னியக்கு விசையால் ஏற்படும் மின்னோட்டம் ***வெப்ப மின்னோட்டம்*** எனப்படும்.
- இரு உலோகங்கள் இணைந்து சந்திப்புளை ஏற்படுத்துவது ***வெப்ப மின்னிரட்டை*** எனப்படும்.
- வெப்ப சந்தி மற்றும் குளிர் சந்திகளை இடமாற்றம் செய்தால், மின்னோட்டம் பாயும் திசையும் மாறும். ஏனவே சீபெக் விளைவு *ஒரு **மீள் விளைவு*** ஆகும்.
- வெப்ப மின்னிரட்டையில் தோன்றும் மின்னியக்கு விசையின் எண்மதிப்பு கீழ்கண்டவற்றை சாா்ந்திருக்கும்.
  1) மின்னிரட்டையில் இடம்பெறும் உலோகங்களின் தன்மை
  2) சந்திகளின் வெப்பநிலை வேறுபாடு

பயன்பாடுகள் :

- மின்உற்பத்தி நிலையங்களில் வீணாகும் வெப்ப ஆற்றலை மின்னாற்றலாக மாற்ற பயன்படுகிறது
- தானியங்கி வாகனங்களில் பயனுறு திறனை அதிகரிக்கு பயன்படுகிறது
- வெப்பமின்னிரட்டை அடுக்குகளில் பயன்படுகிறது.

**9. பெல்டியர் விளைவு விளக்குக.**

**பெல்டியர் விளைவு :**


- வெப்ப மின்னிரட்டையுடன் கூடிய மின்சுற்றில் மின்னோட்டத்தை செலுத்தும்போது, ஒரு சந்தியில் வெப்பம் வெளிப்படுதலும் மற்றொரு சந்தியில் வெப்பம் உட்கவரப்படுதலும் நடைபெறும். இது பெல்டியர் விளைவு எனப்படும்.
- Cu – Fe ஆல் ஆன வெப்ப மின்னிரட்டையைக் கருதுவோம். இதில் A மற்றும் B புள்ளி சமவெப்பநிலையில் இருக்கும்.
- இப்போது மின்கல அடுக்கு மின்னிரட்டை வழியே மின்னோட்டத்தை செலுத்துகிறது என்க.
- சந்தி A - யில் மின்னோட்டம் தாமிரத்திலிருந்து (Cu) இரும்பிற்கு (Fe) பாய்கிறது. அங்கு வெப்பம் உட்கவரப்பட்டு சந்தி A குளிர்வடைகிறது.
- சந்தி B - யில் மின்னோட்டம் இரும்பிலிருந்து (Fe) தாமிரத்திற்கு (Cu) பாய்கிறது. அங்கு வெப்பம் வெளிப்பட்டு சந்தி B வெப்பமடைகிறது.
- மின்னோட்டத்தின் திசையை மாற்றினால், சந்தி A வெப்பமடைகிறது, சந்தி B குளிர்வடைகிறது. எனவே பெல்டியர் விளைவு ஒரு ***மீள் விளைவு*** ஆகும்.

**10. பெல்டியர் விளைவு மற்றும் ஜூல் விளைவு வேறுபடுத்துக.**

| பெல்டியர் விளைவு | ஜூல் விளைவு |
|---|---|
| 1) வெப்பம் வெளிப்படுதல் மற்றும் உட்கவரப்படுதல் இரண்டும் ஏற்படும் | 1) வெப்பம் வெளிப்படுதல் மட்டுமே ஏற்படும் |
| 2) சந்தியில் மட்டும் நடைபெறுமு | 2) கடத்தி முழுவதும் நடைபெறும் |
| 3) இரு ஒரு மீள் விளைவு | 3) இது ஒரு மீளா விளைவு |

**11. தாம்சன் விளைவு விளக்குக.**

**<u>தாம்சன் விளைவு</u> :**





- ஒரு கடத்தியின் இரு புள்ளிகள் வெவ்வேறு வெப்பநிலையில் உள்ள போது, இந்த புள்ளிகளில் எலக்ட்ரான் அடர்த்தி வேறுபடுவதால், இவ்விரு புள்ளிகளுக்கிடையே மின்னழுத்த வேறுபாட உருவாக்கப்படும் என்று தாம்சன் நிருபித்தார்.
- தாமிர தண்டு AB - யின் மையம் C வெப்பப்படுத்தப்படுகிறது என்க.
- AB - யின் வழியே மின்னோட்டம் பாய்ந்தால், புள்ளி C - ஆனது உயர் மின்னழுத்தத்தில் அமையும்.
- இதனால் AC பகுதியில் வெப்பம் உட்கவர்தலும், CB பகுதியில் வெப்பம் வெளிப்படுதலும் ஏற்படும்.
- எனவே மின்னோட்ட பாய்வின் காரணமாக மின்னோட்டத்தின் திசையில் வெப்பப் பரிமாற்றம் நடைபெறும் இது ***நேர்குறி தாம்சன் விளைவு*** எனப்படும்.
- இது வெள்ளி, துத்தநாகம் மற்றும் காட்மியம் போன்ற உலோகங்களிலும் நடைபெறுகிறது.
- மாறாக இரும்புத் தண்டினை பயன்படுத்தும் போது, CA பகுதியில் வெப்பம் வெளிப்படுதலும், BC பகுதியில் வெப்பம் உட்கவரப்படுதலும் நடைபெறும்.
- இங்கு மின்னோட்ட பாய்வினால், மின்னோட்டத்தின் திசைக்கு எதிர்திசையில் வெப்ப பரிமாற்றம் நடைபெறும். இது ***எதிர்குறி தாம்சன் விளைவு*** எனப்படும்.
- இது பிளாட்டினம், நிக்கல், கோபால்ட் மற்றும் பாதரசம் போன்ற உலோகங்களிலும் நடைபெறுகிறது.

## பகுதி – IV 5 மதிப்பெண் வினா – விடைகள்

**1. மின்னோட்டத்தின் நுண்மாதிரிக் கொள்கையை விவரித்து அதிலிருந்து ஓம் விதியின் நுண்வடிவத்தைப் பெறுக.**

**மின்னோட்டத்தின் நுண்மாதிரி :**





- கடத்தியின் குறுக்கு வெட்டு பரப்பு $= A$
  கடத்தியின் ஓரலகு பருமனில் உள்ள எலக்ட்ரான்களின் எண்ணிக்கை $= n$
  வலமிருந்து இடமாக செயல்படும் மின்புலம் $= \vec{E}$
  எலக்ட்ரான்களின் இழுப்பு திசைவேகம் $= v_d$
  எலக்ட்ரானின் மின்னூட்ட மதிப்பு $= e$
- $dt$ – நேர இடைவெளியில், எலக்ட்ரான்கள் நகர்ந்த தொலைவு $dx$ – எனில்,
  $$v_d = \frac{dx}{dt} \quad (or) \quad dx = v_d\, dt$$
- $dt$ –நேரத்தில் உள்ள எலக்ட்ரான்களின் எண்ணிக்கை
  $= $ பருமக்கூறு $X\, n = A\ dx\ X\, n$
  $= A\ v_d\, dt\ X\, n$
- எனவே இப்பரும கூறில் உள்ள மின்துகள்களின் மொத்த மின்னூட்டம்,
  $$dQ = A\, v_d\, dt\ \ n\, e$$
- வரையறைபடி, மின்னோட்டம்
  $$I = \frac{dQ}{dt} = \frac{A\, v_d\, dt\ n\, e}{dt}$$
  $$\boldsymbol{I = n\, e\, A\, v_d}$$

**மின்னோட்ட அடர்த்தி ($\vec{J}$) :**

- கடத்தியின் ஓரலகு குறுக்குவெட்டுப் பரப்பு வழியாக பரப்புக்கு செங்குத்தாக பாயும் மின்னோட்டத்தின் அளவு மின்னோட்ட அடர்த்தி எனப்படும்.
  $$J = \frac{I}{A} = \frac{n\, e\, A\, v_d}{A}$$
  $$\boldsymbol{J = n\ e\ v_d}$$
- மின்னோட்ட அடர்த்தி ஒரு வெக்டர் அளவு. எனவே
  $$\vec{J} = n\ e\ \vec{v_d}$$
- இழுப்பு திசைவேகத்திற்கான கோவையை பிரதியிட
  $$\vec{J} = n\, e\left[-\frac{e\,\tau}{m}\vec{E}\right] = -\frac{n\, e^2\,\tau}{m}\vec{E}$$
- இங்கு, $\frac{n\, e^2\,\tau}{m} = \sigma \rightarrow$ மின்கடத்தும் எண்
  $$\therefore \vec{J} = -\sigma\, \vec{E}$$
- இதில் எதிர்குறியானது எலக்ட்ரான் செல்லும் திசையை எடுத்துக்கொண்டதை குறிக்கிறது.
- ஆனால் மரபு மின்னோட்டமானது நேர்மின்துகளின் திசையில் அதாவது $\vec{E}$ – ன் திசையில் உள்ளதால்,
  $$\vec{J} = \sigma\, \vec{E}$$
- இதுவே ***ஓம் விதியின் நுண்வடிவம்*** ஆகும்.

**2. ஓம் விதியின் நுண்மாதிரி அமைப்பிலிருந்து ஓம் விதியின் பயன்பாட்டு வடிவத்தைப் பெறுக. அதன் வரம்புகளை விவாதி.**


**ஓம் விதியின் பயன்பாட்டு வடிவம் :**




- $l$ –நீளமும், $A$ – குறுக்கு வெட்டுப் பரப்பும் கொண்ட கடத்தியின் ஒரு பகுதியைக் கருதுவோம்
- கடத்தியின் முனைகளுக்க குறுக்கே $V$ – என்ற மின்னழுத்த வேறுபாடு நிறுவப்படும் போது, கடத்தியில் நிகர மின்புலம் தோன்றி மின்னோட்டத்தை உருவாக்கும்..
- கடத்தியின் நீளம் முழுவதும் மின்புலம் சீரானதாக ($E$) கருதினால்,
  $$V = E\, l \qquad (or) \qquad E = \frac{V}{l}$$
- ஓம் விதியின் நுண்வடிவத்தின் படி,
  $$\boldsymbol{J = \sigma\, E = \sigma\,\frac{V}{l}}$$
- ஆனால் மின்னோட்ட அடர்த்தியின் வரையறைபடி,
  $$\boldsymbol{J = \frac{I}{A}}$$
- எனவே,
  $$\frac{I}{A} = \sigma\,\frac{V}{l}$$
  $$\therefore \quad V = I\left[\frac{l}{\sigma\, A}\right] = I\, R$$
- இங்கு, $\frac{l}{\sigma\, A} = R \rightarrow$ கடத்தியின் மின்தடை
- இதுவே ஓம் விதியின் பயன்பாட்டு வடிவம் ஆகும்.

**வரம்புகள் :**


- ஓம் விதிப்படி, மின்னோட்டத்திற்கும் மின்னழுத்த வேறுபாட்டிற்கும் இடையே வரையப்படும் வரைபடம் ஒரு நேர்கோடாகும். இந்த நேர்கோட்டின் சாய்வு மின்தடை ன் தலைகீழ் மதிப்பைத் தரும்.




- ஒரு பொருளின் மீது செல்லும் மின்னோட்டம் மற்றும் மின்னழுத்த வேறுபாடு ஆகிய இரண்டிற்குமான வரைபடம் நேர்கோடாக அமைந்தால், அப்பொருட்கள் ஓம் விதிக்கு உட்படும் பொருட்கள் ஆகும்.
- மின்னோட்டம் மற்றும் மின்னழுத்த வேறுபாட்டிற்கா வரைபடம் நேர்கோடாக அமையாமல் சிக்கலான வடிவில் அமைந்தால், அப்பொருட்கள் ஓம் விதிக்கு உட்படாத பொருட்கள் ஆகும்.

**3. மின்தடையாக்கிகள் தொடர் இணைப்பு மற்றும் பக்க இணைப்புகளில் இணைக்கப்படும் போது அதன் தொகுபயன் மின்தடை மதிப்புகளை தருவி.**

**தொடரிணைப்பில் மின்தடையாக்கிகள் :**




- இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மின்தடையாக்கிகள் ஒன்றன் பின் ஒன்றாக இணைப்பது தொடரிணைப்பு எனப்படும்.
- $R_1, R_2, R_3$ ஆகிய மின்தடை மதிப்பு கொண்ட மூன்று மின்தடையாக்கிகள் தொடராக இணைக்கப்பட்டுள்ளது
- இத்தொகுப்பானது $V$ – மின்னழுத்த வேறுபாடு கொண்ட மின்கலத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.
- தொடர் இணைபப்பில்,
  1) எல்லா மின்தடையாக்கி வழியே ஒரே அளவு மின்னோட்டம் (I) பாயும்.
  2) ஆனால் வெவ்வேறு மின்தடையாக்கிக்கு குறுக்கே உருவாகும் மின்னழுத்த வேறுபாடு வெவ்வேறாகும்.

- $V_1, V_2, V_3$ என்பன முறையே $R_1, R_2, R_3$ மின்தடையாக்கிகளில் குறுக்கே உள்ள மின்னழுத்த வேறுபாடுகள் எனில், ஓம் விதிப்படி

$$V_1 = I\,R_1$$
$$V_2 = I\,R_2$$
$$V_3 = I\,R_3$$

- எனவே மொத்த மின்னழுத்த வேறுபாடு,

$$V = V_1 + V_2 + V_3 = I\,R_1 + I\,R_2 + I\,R_3$$
$$\boldsymbol{V = I\,[R_1 + R_2 + R_3]} \quad ---- \;(1)$$

- தொடரிணைப்பின் தொகுபயன் மின்தடை $R_S$ எனில்,


$$\boldsymbol{V = I\,R_S} \quad ---- \;(2)$$

- சமன்பாடு (1) மற்றும் (2) –லிருந்து

$$I\,R_S = I\,[R_1 + R_2 + R_3]$$
$$\therefore \quad \boldsymbol{R_S = R_1 + R_2 + R_3}$$

- எனவே தொடரிணைப்பின் தொகுபயன் மின்தடை ஆனது தனித்தனி மின்தடைகளின் கூடுதலுக்குச் சமமாகும்.
- இத் தொகுபயன் மின்தடையானது தொடர் இணைப்பில் உள்ள உயர்ந்தபட்ச தனித்த மின்தடை மதிப்பை விட அதிகமாக இருக்கும்.

**<u>பக்க இணைப்பில் மின்தடையாக்கிகள்</u> :**




- ஒரு மின்னழுத்த வேறுபாட்டின் குறுக்கே பல மின்தடையாக்கிகள் இணைத்தால், அது பக்க இணைப்பு எனப்படும்.
- $R_1, R_2, R_3$ ஆகிய மின்தடை மதிப்பு கொண்ட மூன்று மின்தடையாக்கிகள் பக்க இணைக்கப்பட்டு அத்தொகுப்பானது $V-$ மின்னழுத்த வேறுபாடு கொண்ட மின்கலத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.
- பக்க இணைபப்பில்,
  1) எல்லா மின்தடையாக்கிக்கு குறுக்கே உருவாகும் மின்னழுத்த வேறுபாடு ஒரே அளவாக இருக்கும் $(V)$
  2) ஆனால் வெவ்வேறு மின்தடையாக்கிக்கு வழியே வெவ்வேறு மின்னோட்டம் பாயும்.

- $I_1, I_2, I_3$ என்பன முறையே $R_1, R_2, R_3$ மின்தடையாக்கிகளில் வழியே பாயும் மின்னோட்டங்கள் எனில், ஓம் விதிப்படி

$$I_1 = \frac{V}{R_1}$$
$$I_2 = \frac{V}{R_2}$$
$$I_3 = \frac{V}{R_3}$$

- எனவே மொத்த மின்னோட்டம்

$$I = I_1 + I_2 + I_3 = \frac{V}{R_1} + \frac{V}{R_2} + \frac{V}{R_3}$$
$$\boldsymbol{I = V\left[\frac{1}{R_1} + \frac{1}{R_2} + \frac{1}{R_3}\right]} \quad ---- \;(1)$$

- பக்க இணைப்பின் தொகுபயன் மின்தடை $R_P$ எனில்,

$$\boldsymbol{I = \frac{V}{R_P}} \quad ---- \;(2)$$


- சமன்பாடு (1) மற்றும் (2) –லிருந்து

$$\frac{V}{R_P} = V\left[\frac{1}{R_1} + \frac{1}{R_2} + \frac{1}{R_3}\right]$$
$$\therefore \quad \boldsymbol{\frac{1}{R_P} = \frac{1}{R_1} + \frac{1}{R_2} + \frac{1}{R_3}}$$

- எனவே பக்க இணைப்பின் தொகுபயன் மின்தடையின் தலைகீழ் மதிப்பானது, தனித்தனி மின்தடைகளின் தலைகீழ் மதிப்புகளின் கூடுதலுக்குச் சமமாகும்.
- இத் தொகுபயன் மின்தடையானது பக்க இணைப்பில் உள்ள குறைந்தபட்ச தனித்த மின்தடை மதிப்பை விட குறைவாக இருக்கும்.

**4. வோல்ட்மீட்டரை பயன்படுத்தி மின்கலத்தின் அகமின்தடையை காண்பதை விளக்குக.**

**<u>அகமின்தடை கணக்கிடுதல்</u> :**




- மின்கலத்தினுள் மின்துகள்களின் இயக்கத்திற்கு மின்பகுளியால் ஏற்படுத்தப்படும் தடை மின்கலத்தின் அகமின் தடை $(r)$ எனப்படும்
- முதலில் மின்கலத்தின் மின்னியக்கு விசையை $(\xi)$ கண்டறிய அதன் குறுக்கே உயர் மின்தடை கொண்ட வோல்ட்மீட்டர் இணைக்கப்படுகிறது.
- இச்சுற்று திறந்த சுற்றாக செயல்படுவதால், வோல்ட்மீட்டரானது மின்னியக்கு விசையின் அளவை காட்டும்.
- பின்னர் $R-$ என்ற புற மின்தடையாக்கிய மின்சுற்றில் இணைத்தால், $I-$ என்ற மின்னோட்டம் சுற்றில் பாயும்.
- இந்நிலையில் வோல்ட்மீட்டரானது $R-$க்கு குறுக்கே உள்ள மின்னழுத்த வேறுபாட்டை (V) காட்டும்.
- ஓம் விதிப்படி,$R-$க்கு குறுக்கே மின்னழுத்த வேறுபாடு,

$$V = I\,R \quad ---- \;(1)$$

- அகமின்தடை $r$ –ன் காரணமாக வோல்ட்மீட்டர் காட்டும் $V$ –ன் மதிப்பு, $\xi$ –ஐ விட குறைவாக இருக்கும். எனவே,

$$V = \xi - I\,r \quad ---- \;(2)$$
$$(or) \quad I\,r = \xi - V$$
$$\therefore \quad \boldsymbol{r = \frac{\xi - V}{I} = \left[\frac{\xi - V}{V}\right] R}$$

- $\xi$, $V$ மற்றும் R ஆகிய தெரிந்த மதிப்புகளைக் கொண்டு அகமின்தடை $\boldsymbol{r}$ மற்றும் மொத்த மின்னோட்டம் I – ஐ கணக்கிடலாம்.
- மேலும் மின்கலத்தால் இம்மின்சுற்றுக்கு அளிக்கப்படும் திறன்,


$$P = I\,\xi = I\,(V + I\,r) = I\,(I\,R + I\,r)$$
$$\boldsymbol{P = I^2\,R + I^2\,r}$$

- இங்கு, $I^2\,R \rightarrow \; R$ –க்கு அளிக்கப்படும் திறன்
  $I^2\,r \rightarrow \; r$ –க்கு அளிக்கப்படும் திறன்

**5. கிர்க்காஃப் விதிகளை கூறி விளக்குக.**

1) **<u>கிர்க்காஃப் முதல் விதி (மின்னோட்ட விதி)</u> :**
   - எந்த ஒரு சந்தியிலும் சந்திக்கின்ற மின்னோட்டங்களின் குறியியல் கூட்டுத்தொகை சுழியாகும்.

**<u>விளக்கம்</u> :**



- இது ***மின்னூட்ட அழிவின்மை விதியின்*** அடிப்படையில் அமைகிறது. அதாவது சந்தியில் மின்துகள்கள உருவாக்கப்படுவதோ, அழிவதோ இல்லை.
- எனவே சந்தியில் நுழையும் மின்துகள்கள் அனைத்தும் சந்தியை விட்டு வெளியேறும்.
- படத்தில் காட்டியவாறு மின்சுற்று ஒன்றை கருதுவோம்.
- இதில் சந்தியை நோக்கி செல்லும் மின்னோட்டங்களை நேர்குறியாகவும், சந்தியை விட்டு வெளிச்செல்லும் மின்னோட்டங்களை எதிர்குறியாகவும் கொள்ளப்படுவது மரபு.
- சந்தி A - க்கு இவ்விதியை பயன்படுத்த,


$$I_1 + I_2 - I_3 - I_4 - I_5 = 0$$

$$(or) \quad I_1 + I_2 = I_3 + I_4 + I_5$$

2) **<u>கிர்க்காஃப் இரண்டாம் விதி (மின்னழுத்த வேறுபாட்டு விதி)</u> :**

- எந்த ஒரு மூடிய சுற்றின் ஒவ்வொரு பகுதியிலும் உள்ள மின்னோட்டம் மற்றும் மின்தடை ஆகியவற்றின் பெருக்கற்பலன்களின் குறியியல் கூட்டுத்தொகையானது, அந்த மின்சுற்றில் உள்ள மின்னியக்கு விசைகளின் குறியியல் கூட்டுத்தொகைக்குச் சமம்


**<u>விளக்கம்</u> :**




- இது ***ஆற்றல் மாறா விதியின்*** அடிப்படையில் அமைகிறது. அதாவது மின்னியக்க விசை மூலம் அளிக்கும் ஆற்றலானது, எல்லா மின்தடையாக்கிகள் பெறும் ஆற்றல்களின் கூடுதலுக்குச் சமமாகும்.
- இவ்விதியில் பயன்படுத்தப்படும் குறியிடுதல் மரபு படத்தில் காட்டப்பட்டுள்ளது.

6. **வீட்ஸ்டோன் சமனச்சுற்றில் சமனசெய் நிலைக்கான நிபந்தனையைப் பெறுக.**

**<u>வீட்ஸ்டோன் சமன சுற்று</u> :**




- இது கிர்க்காஃப் விதிகளின் முக்கிய பயன்பாடு ஆகும்.
- இதன் மூலம் தெரியாத மின்தடையாக்கியின் மதிப்பைக் கண்டறியவும், மின்தடையாக்கிகளை ஒப்பிடவும் செய்யலாம்.
- இதில் $P, Q, R$ மற்றும் $S$ என்ற மின்தடையாக்கிகள் இணைக்கப்பட்ட வலை அமைப்பு உள்ளது.
- B மற்றும் D புள்ளிகளுக்கிடையே G - மின்தடை மதிப்பு கொண்ட கால்வனாமீட்டர் இணைக்கப்பட்டுள்ளது.
- A மற்றும் C புள்ளிகளுக்கிடையே $\xi$ - மின்னியக்கு விசை கொண்ட மின்கலம் இணைக்கப்பட்டுள்ளது.
- $I_1, I_2, I_3, I_4$ என்பன வெவ்வேறு பிரிவுகளின் பாயும் மின்னோட்டங்கள் மற்றும் $I_G$ என்பது கால்வனாமீட்டர் வழியே பாயும் மின்னோட்டம் என்க.
- B மற்றும் D சந்திகளுக்கு கிர்க்காஃப் மின்னோட்ட விதியை பயன்படுத்த

$$I_1 - I_G - I_3 = 0 \qquad ----(1)$$

$$I_2 + I_G - I_4 = 0 \qquad ----(2)$$

- ABDA மற்றும் ABCDA என்ற மூடிய சுற்றுகளில் கிர்க்காஃப் மின்னழுத்த விதியை பயன்படுத்த,

$$I_1 P + I_G G - I_2 R = 0 \qquad ----(3)$$

$$I_1 P + I_3 Q - I_2 R - I_4 S = 0 \qquad ----(4)$$

- சமநிலையில்,B மற்றும் D புள்ளிகள் சமமின்னழுத்தத்தில் இருக்கும்.
- எனவே கால்வனாமீட்டர் வழியே மின்னோட்டம் பாயாது. அதாவது $\boldsymbol{I_G = 0}$
- இதனை சமன்பாடுகள் (1), (2), (3) –ல் பிரதியிட

$$I_1 - I_3 = 0 \quad (or) \quad I_1 = I_3 \qquad ----(5)$$

$$I_2 - I_4 = 0 \quad (or) \quad I_2 = I_4 \qquad ----(6)$$

$$I_1 P - I_2 R = 0 \quad (or) \quad I_1 P = I_2 R \qquad ----(7)$$

- சமன்பாடுகள் (5) மற்றும் (6)–ஐ சமன்பாடு (4)–ல் பிரதியிட,

$$I_1 P + I_1 Q - I_2 R - I_2 S = 0$$

$$I_1 (P + Q) - I_2 (R + S) = 0$$

$$\therefore \quad I_1 (P + Q) = I_2 (R + S) \qquad ----(8)$$

- சமன்பாடு (8)–ஐ சமன்பாடு (7) –ஆல் வகுக்க,

$$\frac{I_1 (P + Q)}{I_1 P} = \frac{I_2 (R + S)}{I_2 R}$$

$$\frac{P + Q}{P} = \frac{R + S}{R}$$

$$1 + \frac{Q}{P} = 1 + \frac{S}{R}$$


$$\frac{Q}{P} = \frac{S}{R}$$

$$(or) \quad \boldsymbol{\frac{P}{Q} = \frac{R}{S}} \qquad ----(9)$$

- இதுவே வீட்ஸ்டோன் சமனசுற்றின் சமநிலைக்கான நிபந்தனை ஆகும்.

7. **மீட்டர் சமனச்சுற்றை பயன்படுத்தி தெரியாத மின்தடையை காண்பதை விளக்குக.**

**<u>மீட்டர் சமனச்சுற்று</u> :**




- இது வீட்ஸ்டன் சமன சுற்றின் மறு வடிவமாகும்.
- இதில் 1 மீட்டர் நீள்முள்ள AB - என்ற சீரான மேங்கனின் கம்பி உள்ளது.
- இது ஒரு மீட்டர் அளவுகோலுக்கு இணையாக ஒரு மரப்பலகையில் C மற்றும் D என்ற இரு தாமிரப்பட்டைகளுக்கு இடையில் நீட்டப்பட்டுள்ளது.
- இவ்விரு தாமிர பட்டைகளுக்கு இடையே E என்ற மற்றொரு தாமிர பட்டை $G_1$ மற்றும் $G_2$ என்ற இரு இடைவெளிகளுடன் பொருத்தப்பட்டுள்ளது.
- $G_1$ - இடைவெளியில் ஒரு தெரியாத மின்தடையாக்கி P -யும், $G_2$ - இடைவெளியில் Q என்ற படித்தர மின்தடையாக்கியும் இணைக்கப்பட்டுள்ளன.
- ஒரு தொடுசாவியானது கால்வனாமீட்டர் (G) மற்றும் உயர்மின்தடையாக்கி (HR) வழியே மைய தாமிர பட்டையில் (E) இணைக்கப்பட்டுள்ளது.

- மேங்கனின் கம்பிக்கு குறுக்கே ஒரு லெக்லாஞ்சி மின்கலமும் சாவியும் இணைக்கப்பட்டுள்ளன.
- இப்போது கம்பியின் மீது தொடுசாவியை நகர்த்தி கால்வனாமீட்டரில் சுழி விலக்கம் ஏற்படுமாறு செய்யப்படுகிறது. தொடுசாவியின் அந்நிலையை J என்க.
- இங்கு AJ மற்றும் JB என்ற நீளங்கள் முறையே வீட்ஸ்டோன் சமனசுற்றின் மின்தடையாக்கிகள் R மற்றும் S பதிலாக அமைந்துள்ளது.
- எனவே சுழிவிலக்க நிலையில்,

$$\frac{P}{Q} = \frac{R}{S} = \frac{R'AJ}{R'JB}$$

- இங்கு $R' \rightarrow$ கம்பியின் ஓரலகு நீளத்தின் மின்தடை

$$\frac{P}{Q} = \frac{AJ}{JB} = \frac{l_1}{l_2} \qquad ----(1)$$


$$(or) \quad P = Q\,\frac{l_1}{l_2} \qquad ----(2)$$

- இதில் கம்பியானது தாமிர பட்டைகளின் மீது பற்ற வைத்திருப்பதால் முழுமையற்ற இணைப்பின் காரணமாக, இணைப்பில் மிகச்சிறிய அளவு மின்தடை அதிகரித்திருக்கக் கூடும். இந்த மின்தடையாக்கிகள் முனை மின்தடைகள் எனப்படும்.
- இதனால் ஏற்படும் பிழையை நீக்க P மற்றும் Q வை இடப்பரிமாற்றம் செய்து சோதனை மீண்டும் செய்யப்பட்டு P–ன் சராசரிமதிப்பு கணக்கிடப்படுகிறது.
- P என்ற கம்பியின் ஆரம் $r$ – மற்றும் நீளம் $l$ எனில், அக்கம்பிப்பொருளின் மின்தடை எண் ஆனது,

$$\rho = \frac{PA}{l} = \frac{P\pi r^2}{l} \qquad ----(3)$$

**8. மின்னழுத்தமானியை பயன்படுத்தி இரு மின்கலங்களின் மின்னியக்கு விசைகள் எவ்வாறு ஒப்பிடப்படுகின்றன ?**

**<u>இரு மின்னியக்க விசைகளை ஒப்பிடுதல் :</u>**




- மின்னழுத்தமானி கம்பி CD ஆனது மின்கலத் தொகுப்பு Bt மற்றும் சாவி K உடன் தொடரிணைப்பில் இணைக்கப்பட்டுள்ளது. ***இது முதன்மை சுற்று*** ஆகும்.
- கம்பியின் முனை C ஆனது DPDT சாவியில் உள்ள M முனையில் இணைக்கப்பட்டுள்ளது.N முனையானது கால்வனாமீட்டர் (G) மற்றும் உயர்மின்தடையாக்கி (HR) வழியாக தொடுசாவியுடன் இணைக்கப்பட்டுள்ளது. இது ***துணை சுற்று*** ஆகும்.
- மின்னியக்க விசைகள் ஒப்பிடவேண்டிய இரு மின்கலன்கள் $\xi_1$ மற்றும் $\xi_2$ முறையே DPDT இல் உள்ள $M_1N_1$ மற்றும் $M_2N_2$ முனைகளுடன் இணைக்கப்பட்டுள்ளன.
- முதலில் மின்கலம் $\xi_1$ துணைசுற்றில் இணைக்கப்படும். இப்பபோது தொடுசாவியை கம்பியின் மீது நகர்த்தி கால்வனாமட்டரில் சுழி விலக்கம் பெறப்பட்டு சமன்செய் நீளம் $l_1$ அளவிடப்படுகிறது.
- பின்னர் மின்கலம் துணைசுற்றில் இணைக்கப்பட்டு, சமன்செய்யும் நீளம் $l_2$ கண்டறியப்படுகிறது.
- கம்பி வழியே பாயும் மின்னோட்டம் $I$ – எனவும், கம்பியின் ஓரலகு நீளத்தின் மின்தடை $r$ – எனவும் கொள்வோம்.
- மின்னழுத்தமானியின் தத்துவத்தின் படி,

$$\xi_1 = I\,r\,l_1 \qquad ---- (1)$$

$$\xi_2 = I\,r\,l_2 \qquad ---- (2)$$


- சமன்பாடு (1) – ஐ சமன்பாடு (2) – ஆல் வகுக்க

$$\frac{\xi_1}{\xi_2} = \frac{I\,r\,l_1}{I\,r\,l_2}$$

$$\frac{\xi_1}{\xi_2} = \frac{l_1}{l_2} \qquad ----(3)$$

**9. மின்னழுத்தமானியை பயன்படுத்தி மின்கலத்தின் அகமின்தடை கணக்கிடும் முறையை விளக்குக**

**<u>மின்னழுத்தமானியை பயன்படுத்தி அகமின்தடை காணல்</u>**




- மின்னழுத்தமானி கம்பி CD ஆனது மின்கலத் தொகுப்பு Bt மற்றும் சாவி $K_1$ உடன் தொடரிணைப்பில் இணைக்கப்பட்டுள்ளது. ***இது முதன்மை சுற்று*** ஆகும்.
- அகமின்தடை காணவேண்டிய மின்கலம் $\xi$ படத்தில் காட்டியவாறு துணைசுற்றில் இணைக்கப்படுகிறது.
- மின்கலம் $\xi$ – ன் குறுக்கே ஒரு மின்தடைபெட்டி R மற்றும் சாவி $K_2$ இணைக்கப்பட்டுள்ளது.
- முதலில் சாவி $K_2$ திறந்த நிலையில், சமன்செய் புள்ளி J கண்டறிந்து , சமன் செய் நீளம் $l_1$ அளவிடப்படுகிறது.
- எனவே தத்துவத்தின்படி,

$$\xi \propto l_1 \qquad ----(1)$$

- பின்னர் சாவி $K_2$ மூடப்பட்டு, மீண்டும் சமன்செய் நீளம் $l_2$ கண்டறியப்படுகிறது
- மின்கலத்தின் $(\xi)$ அகமின்தடை $r$ எனில், $R$ வழியே பாயும் மின்னோட்டம்

$$I = \frac{\xi}{R+r}$$

- எனவே $R$ –ன் குறுக்கே உள்ள மின்னழுத்த வேறுபாடு

$$V = I\,R = \frac{\xi}{R+r}\,R$$

- எனவே தத்துவத்தின்படி,

$$\frac{\xi}{R+r}\,R \propto l_2 \qquad ----(2)$$

- சமன்பாடு (1) – ஐ சமன்பாடு (2) – ஆல் வகுக்க

$$\frac{\xi}{\left(\frac{\xi}{R+r}\,R\right)} = \frac{l_1}{l_2}$$

$$\frac{R+r}{R} = \frac{l_1}{l_2}$$

$$1 + \frac{r}{R} = \frac{l_1}{l_2}$$

$$\frac{r}{R} = \frac{l_1}{l_2} - 1 = \frac{l_1 - l_2}{l_2}$$

$$r = R\left[\frac{l_1 - l_2}{l_2}\right] \qquad ---(3)$$

- $R,\ l_1, l_2$ மதிப்புகளை சமன்பாடு (3) –ல் பிரதியிட்டு மின்கலத்தின் அகமின்தடையை கணக்கிடலாம்.
- இங்கு மின்கலத்தின் அகமின்தடை மாறிலியாக அமையாமல், புறமின்தடை R மதிப்பு அதிகரிக்கும் போது அதிகரிக்கும்.